ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2192/8 - 2020 සැප්තැම්බර් මස 07 වැනි සඳුදා - 2020.09.07

*2192/8 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 07 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### உக்கல் அலுத்நுவர கதிர்காமம் தேவாலயத்தின் வருடாந்த எசல பெரஹர - 2020

2020 ஆம் ஆண்டின் எசல பெரஹர நிகழ்விற்கான முகூர்த்தக்கால் ஊன்றும் வைபவம் 2020.07.20 ஆந் திகதி நடாத்தப்படும்.

**பெரஹர நடைபெறும் கால எல்லை :**

- 2020.09.17 ஆந் திகதி சர்வ ராத்திரி பிரித் தர்ம போதனை மற்றும் அடுத்த நாள் பிக்குகளுக்கு தானமும் கொடுக்கப்படும்.
- 2020.09.19 ஆந் திகதி முதல் 2020.09.23 ஆந் திகதிவரை உள்வீதி பெரஹர நடைபெறும்.
- 2020.09.24 ஆந் திகதி முதல் 2020.09.27 ஆந் திகதிவரை இரு வேளை பெரஹர ஊர்வலம் இடம்பெறும்.
- 2020.09.28 ஆந் திகதி முதல் 2020.10.02 ஆந் திகதிவரை மகா பெரஹர நடைபெறும்.
- 2020.10.03 ஆந் திகதி காலை சுப வேளையில் நீர்வெட்டும் வைபவத்தின் பின்னர் எசல பெரஹர ஊர்வலம் நிறைவுபெறும்.

**முகாமிடப்பட்ட பிரதேசம் என்பது :**

2. ஆலய பூமியின் மேல் வீதி, கிழக்குப் பக்கம் மற்றும் மேற்குப் பக்கம் ஆகியன பிரித் வத்த, கல்வத்த, மாலுகார வத்த மற்றும் வடக்குத் திசையில் அமைந்துள்ள உடகஹகெதரவத்த ஆகிய பிரதேசம் பெரஹர நடைபெறும் பிரதேசமாகக் குறிக்கப்பட்டுள்ளது.

**உணவு மற்றும் நீர் :**

3. விகாரை வளாகம், போதி வளாகம், சைத்திய வளாகம் மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசத்தில் உணவு சமைத்தலை தடை செய்கிறேன்.

4. யானைகள் கட்டப்பட்டிருக்கும் இடங்களில் அநாவசியமாக நடமாடல் மற்றும் அவைகளுக்கு உணவு கொடுத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

5. பக்தர்களுக்குத் தேவையான குடிநீர், மேலதிக தண்ணீர் தாங்கிகள் மூலம் நீர் வழங்குவதற்கு தேசிய நீர் வடிகால் மற்றும் நீர் வழங்கல் சபையின் பிரதேச அலுவலகத்திற்கு மற்றும் இம்புல்பே பிரதேச சபைக்குப் பொறுப்பளிக்கின்றேன்.

1A - G 32815 — 20 (2020/09)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*6. பக்தர்களுக்குத் தேவையான குடிநீர் மற்றும் குடிநீர் தாங்கிகள் வசதிகளை செய்தல் தேசிய நீர் வடிகாலமைப்பு மற்றும் நீர்ப்பாசன சபைக்கும் இம்புல்பே பிரதேச சபைக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.*

***வியாபாரம் மற்றும் கடைத்தொகுதி அமைத்தல் :***

*7. தேவாலயத்தின் மேல் வளாகம், மத்திய வீதி, வளாகத்தினுள் பிரவேசிக்கும் வீதி மற்றும் அவ்விரு பிரதேசத்தினுள் பூக்கள், வாசனைத் திரவியங்கள், மெழுகுதிரி மற்றும் தேவையான பூசைப் பொருட்கள் விற்பனை செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது.*

*8. மேற்குறிப்பிடப்பட்ட (2) இரண்டாம் சரத்தில் குறிப்பிட்டுள்ளதன்படி தேவாலய வளாகத்திலும் வேறு ஸ்தானங்களிலும் வியாபாரம் செய்தலை தடை செய்கிறேன்.*

*9. உற்சவ காலங்களில் வியாபாரம் செய்தலுக்காக குத்தகைக்கு விடப்படும் தற்காலிகக் கடை, காணி மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசத்தில் நீதி முறைப்படி ஏற்றுக்கொள்ளப்படாத பாண்டங்களை விளம்பரப்படுத்துதல், விற்பனை செய்தலை தடை செய்கிறேன்.*

*10. பிரதேச செயலாளரின் அதிகாரம்பெற்ற அலுவலரொருவரது அனுமதியின்றி எந்த ஒரு நபராலும் முகாமிடப்பட்டுள்ள பிரதேசத்திற்குள் டிக்கெட், கொடி விற்றல் அல்லது வேறு ஒரு முறையில் எவ்வித காரியத்திற்காகவும் பணச் சேகரித்தல் என்பன செய்யக் கூடாது. அத்துடன் பெரஹர ஊர்வலம் நிகழும் கால எல்லைக்குள் அப்பூமியிலும், அச்சுற்றுப்புற ஆலய எல்லைக்குள் புகையிலை தொடர்பான உற்பத்திகள், அனைத்து மதுப்பொருள் விற்பனை மற்றும் உபயோகப்படுத்தலைப் பூரணமாகத் தடைசெய்கிறேன்.*

*11. என்னிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட அனுமதியின்றி முகாமிடப்பட்டுள்ள பிரதேசத்தில் எவ்வித கட்டிடமொன்றினை அமைத்தல் மற்றும் அனுமதியில்லாத விற்பனைக் கருமங்கள் தடை செய்யப்பட்டுள்ளதுடன் அவ்வாறான கருமங்கள், நிர்மாணப் பணிகள் சுகாதாரப் பிரிவின் சிபாரிசுகளின்படி பொலிஸாரால் அகற்றப்படும்.*

***வாகனங்கள் :***

*12. பெரஹர ஊர்வலம் நிகழும் காலத்திற்குள் விழா பூமிக்கு வாகனங்கள் உட்செல்வதற்கு எசல விழாவிற்காக வெளியிடப்பட்ட அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனங்களுக்கு மாத்திரமே அனுமதி அளிக்கப்படும். அதன்படி கீழ்க்காணும் வீதிகளில் போக்குவரத்திற்காக வாகனங்களுக்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது.*

- *கொழும்பு, பதுளை பிரதான வீதிகளில் அலுத்நுவர பிரதேச செயலாளர் அலுவலக முச்சந்தியிலிருந்து ஆலய பூமிக்கு உட்பிரவேசிக்கும் வீதி.*
- *தொடபல்ல, பொகுணேகம பிரதேசங்களிலிருந்து ஆலயத்திற்கு உட்பிரவேசிக்கும் வீதி.*
- *பிரித்வத்த, கல்வத்த பிரதேசங்களிலிருந்து ஆலய பூமிக்கு உட்பிரவேசிக்கும் பாதை.*

*13. பிரதான வீதியில் பிரத்தியேக வாகனங்கள் நிறுத்தி வைத்தலை முற்றிலும் தடை செய்கிறேன். இருசக்கர வண்டி மற்றும் தள்ளுவண்டி உட்பட அனைத்து வாகனங்களும் வீதி மற்றும் முகாமிற்குப் பொறுப்பான அலுவலரின் அனுமதிப்பத்திரம் இன்றி முகாம் பூமிக்கு உட்செல்லல் தடையாகும்.*

***புகைப்படம் எடுத்தல் :***

*14. அனுமதியின்றி ஆலயத்தின் மேற்பகுதி, மாளிகையின் மேற்பகுதி புகைப்படம் எடுத்தல் மற்றும் ஒளிப்பதிவு செய்தல் முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது.*

***மின்சார வசதி :***

*15. ஆலய பூமியின் மற்றும் அருகிலுள்ள வீதி விளக்கு மற்றும் மேலதிக விளக்குகளைப் பொருத்துதல், இலங்கை மின்சார சபைக்கு மற்றும் இம்புல்பே பிரதேச சபைக்குப் பொறுப்பளிக்கிறேன்.*

***சுகாதார வசதிகள் :***

*16. பெரஹர மகோற்சவத்திற்கு முன்பு மற்றும் பின்பு சுகாதார விடயங்கள், சுகாதார நல பாதுகாப்பு விடயங்கள், டெங்கு ஒழிப்பு விடயங்கள் மற்றும் கழிவுகளை அப்புறப்படுத்துதல் போன்றவை இம்புல்பே பிரதேச சபைக்கு, சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு மற்றும் சப்பிரகமுவ மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்திற்குக் கையளிக்கிறேன்.*

*17. யாரேனும் நோய்த் தொற்றுக்குள்ளானவரின் அல்லது தொற்று நோயொன்றினால் பாதிக்கப்பட்ட எந்த ஒரு நபரும் முகாம் வளாகத்திற்கு உட்செல்லல் கூடாது. அத்துடன் நாட்டில் நடைமுறையிலுள்ள நிகழ்வாக சுகாதார விதிமுறைகளுக்கு ஏற்ப சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகளுக்கு ஏற்ப குறிப்பாக கோவிட் 19 அசாதாரண நிலைமைக்கு ஏற்ப நடந்துகொள்ளுமாறு கண்டிப்பாகப் பொறுப்பேற்கப்பட வேண்டும்.*

**யாசகர்கள் :**

*18. யாசகம் பெறல் அல்லது புண்ணியத்திற்கு கையேந்துவதற்காக பூஜை பூமியின் வெளியே ஒதுக்கப்பட்டுள்ள அல்லது அளிக்கப்படும் இடத்தினை முகாமிடப்பட்டுள்ள பிரதேசத்திற்குள் பணத்தால் அல்லது வேறு முறையால் அல்லது வேறு முறையில் அல்லது எவ்வித நபரினாலும் புண்ணியத்திற்காக வழங்கல் அல்லது தானம் செய்தல் அனுமதி அளிக்கப்பட மாட்டாது.*

**பாதுகாப்பு :**

*19. அனைத்துப் பாதுகாப்பு அலுவல்கள், பெரஹர ஊர்வலத்திற்கு இடையூறு ஆகாத வண்ணம் வீதியில் வண்டி வாகனங்கள் செலுத்துதலைப் பாதுகாப்புப் பிரிவு மற்றும் பொலிஸாருக்குப் பொறுப்பளிக்கிறேன்.*

**வேறு :**

*20. பட்டாசு, வெடிப் பொருட்கள் போன்றவை பிரதேசத்திற்குள் வெடிக்கச் செய்தல் தடையாகும்.*

*மொழிக் கருத்து வேறுபாடு வரும் சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியைக் கையாளவும்.*

**பி. எம். பி. எம். ஏ. படுகெதர,**
*பிரதேச செயலாளர்,*
*இம்புல்பே.*

*பிரதேச செயலகம்,*
*இம்புல்பே.*

*09-492*

---

## பொல்துபே சமன் தேவாலயத்தின் வருடாந்த பெரஹரா - 2020

*இவ்வாலயத்தின் 2020 இற்கான முகூர்த்தக்கால் ஊன்றும் வைபவம் 2020, யூன் மாதம் 22 ஆந் திகதி நடைபெறும்.*

**பெரஹர நடைபெறும் கால எல்லை :**

- *2020.09.17 ஆந் திகதி முதல் 2020.09.27 ஆந் திகதி வரை பெரஹர ஊர்வலத்தின் உள்வீதி வலம் ஆரம்பமாகும்.*
- *2020.09.28 ஆந் திகதி முதல் 2020.10.02 ஆந் திகதி வரை மஹா பெரஹர நடைபெறும்.*
- *2020.10.03 ஆந் திகதி வலஹீன் எல்ல முகலான நீர் ஊற்றில் நீர் வெட்டு வைபவத்தின் பின்னர் பெரஹர ஊர்வலம் ஆலயத்திற்குள் பிரவேசிப்பதோடு எசல பெரஹர உற்சவம் நிறைவுறும்.*

**பெரஹர நடைபெறும் பிரதேசம் :**

*2. ஆலயத்திற்கு வடக்கு : வீதி, எம். கே. லூயிஸ் சிங்ஹோ, எம். கே. பொடி மஹத்மயா ஆகியோரின் காணியும்; கிழக்கு : சிறிமல், எம். கே. விஜதாஸ ஆகியோரின் காணியும்; தெற்கு : ரண்பண்டாரவின் காணியும், கல்படியவத்த எனும் இடமும்; மேற்கு : பி. எம். விஜேஹாமி மற்றும் நோபட் சிந்தாமணி ஆகியோரின் காணியுமாக அடையாளப்படுத்தப்பட்ட பகுதியை பக்தர்கள் ஒன்றுகூடி வைபவத்தினைக் கண்டுகளிப்பதற்காக ஒழுங்கமைந்துள்ளேன்.*

**உணவு மற்றும் நீர் :**

*3. மேல் வளாகம், சைத்திய வளாகம், விகாரை வளாகம் ஆகிய அனைத்து வளாகங்களிலும் வியாபாரம் செய்தலை தடை செய்கின்றேன்.*

**வியாபாரம் :**

*4. மேல் வளாகம், சைத்திய வளாகம், விகாரை வளாகம் ஆகிய அனைத்து வளாகங்களிலும் வியாபாரம் செய்தலை தடை செய்கின்றேன்.*

*5. கீழ் வீதியில் தெற்கே பிரதான படிக்கட்டுக்களிலிருந்து சிம்மாசன மண்டபம் வரையும் கல்படிக்கட்டு கிழக்கே நாட்டிய அறை வரையும் கீழ் வீதியில் ஆலய பக்கத்திற்கு ரத வளாக மதிலிலிருந்து சைத்திய பிரிவு வரையும் என்னால் நியமிக்கப்பட்ட வளாகம் வரையும் மீண்டும் ரத இல்ல வளாகத்திற்கு கிழக்கிலிருந்து மற்றும் தெற்கே கீழ்ப்பிரிவிலும் ரத இல்ல முன்பக்கத்தில் ஆலயத்தின் கிழக்கு ஊர்வலம் செல்வதற்கு தடை ஏதும் இல்லாத வண்ணம் அனுமதி அளிக்கிறேன்.*

*6. பிரதேச செயலாளரின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தரின் அனுமதி இல்லாமல் எந்தவொரு நபராலும் முகாம் வளாகத்திற்குள் டிக்கெட், கொடி விற்றல் அல்லது வேறு விதமான எந்த கருமத்திற்காகவும் அல்லது பணம் திரட்டல் செய்யக்கூடாது.*

***வாகனம் :***

*7. பிரதான வீதியில் தனியார் வாகனங்களை நிறுத்துதலை தடை செய்கின்றேன். சைக்கிள் மற்றும் வண்டி உட்பட அனைத்து வாகனங்களையும் வீதியில் அல்லது முகாம் பொறுப்பதிகாரியின் அனுமதிப்பத்திரம் இன்றி முகாம் வளாகத்திற்குள் உட்செல்தல் தடையாகும்.*

***சுகாதாரம் :***

*8. நோய்த் தாக்கத்திற்குட்பட்டோரும் தொற்றும் நோய்களை உடையோரும் கொவிட்-19 அசாதாரண நிலை காரணமாக பெரஹர வளாகத்திற்கு உட்பிரவேசித்தல் தடை செய்யப்பட்டுள்ளது.*

***கடைத்தொகுதி அமைத்தல் :***

*9. குத்தகைக்கு எடுக்கப்படும் வணிக பூமியில் அமைக்கப்படும் தற்காலிகக் கட்டிடங்கள் சுகாதாரத் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கு உட்பட வேண்டும். இடத்தினை குத்தகைக்கு எடுக்கும் வியாபாரிகளினால் எசல உற்சவத்தின் பின்னர் முகாம் வளாகத்திற்குள் பொலித்தீன் உட்பட அனைத்துக் குப்பைகளையும் சேர்த்து பொதுசன சுகாதார பரீட்சகர்களின் ஆலோசனைக்கு ஏற்ப அகற்ற வேண்டும்.*

***யாசகர்கள் :***

*10. யாசகம் செய்வது மற்றும் பணம் அல்லது வேறு வழிகளில் யாசகம் கேட்டு நிற்றல் அல்லது வழங்குதல், அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்திலன்றி ஆலய பூமிக்குள் இவ்வாறு நடந்துகொள்வதற்கு தடை செய்யப்பட்டுள்ளது.*

*மொழிக் கருத்து வேறுபாடு வரும் சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியைக் கையாளவும்.*

**பி. எம். பி. எம். ஏ. படுகெதர,**
*பிரதேச செயலாளர்,*
*இம்புல்பே.*

*09- 493*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*